TAMIL NADU LEGISLATURE
25 NOV 1982
MADRAS

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1982 ஏப்ரல் 5

பங்குனி 23, துன்மதி — திருவள்ளுவர் 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

‘‘கதங் காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து’’

சினம் தோன்றாமல் காத்துக் கல்வி கற்று அடக்கமுடையவனாக இருக்க வல்லவனுடைய செவ்வியை, அவனுடைய வழியில் சென்று அறம் பார்த்திருக்கும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

அரசு சார்பில் நடத்தப்பெறும் ஆகஸ்டு 15 சுதந்திர நாள் கொண்டாட்டம்

*வினா எண் 754.—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு நடத்தும் ஆகஸ்டு 15 சுதந்திரநாள் கொண்டாட்டத்தின் போது ஆங்காங்கே சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு பென்ஷன் வழங்குவதற்கு 1944 ஆம் ஆண்டு வரை சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்கு பென்ஷன் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் நாள் நாடு சுதந்திரம் பெறும்வரை பல்வேறு பகுதிகளிலும், சுதேச சமஸ்தானங்களிலும் சுதந்திரப் போராட்டத்திலே பலர் ஈடுபட்டார்கள். 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் நாள் வரையில் நாட்டின் பல பகுதிகளிலும், சுதேச சமஸ்தானங்களிலும் சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்கு அரசு பென்ஷன் வழங்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய ஒரு செயற்குறிப்பு முதலமைச்சரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 1944 ஆம் ஆண்டுக்குப் பின்பும் 1947 ஆம் ஆண்டு வரையும் நாட்டுக்காக விடுதலைப் போராட்ட இயக்கங்களில் பங்குகொண்டு சிறைத்தண்டனை பெற்றவர்களுக்கும் ஒய்வூதியம் தரப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சரின் ஒப்புதலுக்கு அது அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவிலே அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

தியாகிகள் பென்ஷன் பெறுவதற்கான வருமான வரம்பை ரத்து செய்யும் திட்டம்.

*வினா எண்—755. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசிடமிருந்து தியாகிகள் பென்ஷன் பெறும் தியாகிகளின் வருமான வரம்பை ரத்து செய்யும் திட்டம் தமிழக அரசிடம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ):—அரசியல் ஒய்வூதியம் வழங்குவதற்காக வகுக்கப்பட்டுள்ள வருமான உச்ச வரம்பை அரசு அண்மையில்தான் மேலும் தளர்த்துயுள்ளது. இப்பொழுது ஆண்டு வருமானம் ரூ. 5,000 என்று உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனை அறவே ரத்து செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத் தியாகிகள் சான்றுகள் பெறுவதிலே பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. 35, 40 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டதால் தற்போது சான்றுகள் எல்லாம் அழிந்துவிட்டன. அவைகள் எல்லாம் பெரும்பாலும் கிடைக்கவில்லை. எனவே, வேறு வகையில் அவர்கள் சான்றுகள் கொடுப்பதற்கு வழியிருக்கிறதா என்பதை அரசு ஆராயுமா? இந்த தியாகிகள் பென்ஷன் வழங்குகிற கொள்கையை அறிவிப்பதற்கு முன்னதாக அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே ஒரு தியாகிகள் பட்டியல் அரசாங்கத்தால்